காலமானார் முன்னாள் கொறடா துரை. கோவிந்தராஜன் (90)

ஓரத்தநாடு, நவ. 7: தஞ்சாவூர் மாவட்டம், ஓரத்தநாடு வட்டம், வடக்கூரைச் சேர்ந்தவரும், தமிழக அரசின் முன்னாள் கொறடாவுமான துரை. கோவிந்தராஜன் (90), உடல்நலக் குறைவு காரணமாக தஞ்சாவூரிலுள்ள தனியார் மருத்துவமனையில் திங்கள்கிழமை காலமானார்.

தொடக்கத்தில் திமுக உறுப்பினராக இருந்த இவர், 1971 பேரவைத் தேர்தலில் கந்தர்வக் கோட்டை தொகுதியில் போட்டியிட்டு எம்எல்ஏ ஆனார்.

பின்னர், எம்ஜிஆர் அதிமுக கவை தொடங்கியபோது, அக்கட்சியில் இணைந்தார். 1984 –ஆம் ஆண்டு முதல் 1988 –ஆம் ஆண்டு வரை தமிழக அரசின் கொறடாவாக இருந்தார். சில ஆண்டுகளுக்கு முன்பு அமமுகவில் இணைந்த அவர் அக்கட்சியின் விவசாய பிரிவு மாநிலச் செயலராகப் பொறுப்பு வகித்து வந்தார்.

இறுதிச்சடங்கு செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வடக்கூரிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. தொடர்புக்கு: 94442 -60437.

காந்தி கிராம பல்கலை. பட்டமளிப்பு விழா: பிரதமர், ஆளுநர், முதல்வர் பங்கேற்பு

திண்டுக்கல், நவ.7: காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவுக்கு பிரதமர் நரேந்திர மோடி, ஆளுநர் ஆர்.என்.ரவி, முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் வருவதை முன்னிட்டு பல்கலை. வளாகத்தில் தீவிர ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

திண்டுக்கல்லை அடுத்துள்ள காந்தி கிராமத்தில் மத்திய கல்வி அமைச்சகத்தின் நேரடி கட்டுப்பாட்டில் உள்ள இப்பல்கலைக்கழகத்தின் 36–ஆவது பட்டமளிப்பு விழா வருகிற 11–ஆம் தேதி நடைபெறுகிறது.

இந்த விழாவில் 2018–19, 2019–20ஆம் ஆண்டுகளில் தேர்ச்சிப் பெற்ற 2,200–க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பட்டம் வழங்கப்படவுள்ளது.

இதில், சிறப்பு அழைப்பாளராக பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கவுள்ளார்.

இந்த விழாவில், முதல்வர் மு.க.ஸ்டாலின், ஆளுநர் ஆர்.என்.ரவி ஆகியோர் பங்கேற்க வுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. பிரதமர் ஓய்வு எடுப்பதற்காக பல்கலைக்கழக விருந்தினர் இல்லமும், முதல்வருக்காக துணைவேந்தர் இல்லமும் தயாராகி வருகின்றன.

பிரதமரின் வருகையை முன்னிட்டு, பல்கலைக்கழக வளாகத்திலுள்ள சாலைகள் அனைத்தும், தேசிய நெடுஞ்சாலைத் துறை மூலம் புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதேபோல, முதல்வரின் வருகையை உறுதி செய்யும் வகையில், பல்கலைக்கழகம் அருகே 4 வழிச் சாலையிலுள்ள அணுகு சாலைகளில் வேகத் தடைகளை அகற்றும் பணி நடைபெற்று வருகிறது.

பல்கலைக்கழக பல்நோக்கு அரங்கில் பட்டமளிப்பு விழா நடைபெறுவதையொட்டி, அந்த அரங்கு முழுவதையும் அலங்கரிக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழா மேடையை திங்கள்கிழமை ஆய்வு செய்த தமிழக காவல்துறை கூடுதல் இயக்குநர் தாமரைக்கண்ணன் உள்ளிட்ட காவல்துறை அதிகாரிகள்.

பிரதமரின் வருகையையொட்டி, பல்கலைக்கழக வளாகம் முழுவதும் காவல் துறையினரின் தீவிர கண்காணிப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. பட்டமளிப்பு விழாவுக்கான ஏற்பாடுகளை பதிவாளர் வி.பி.ஆர். சிவக்குமார் மேற்கொண்டு வருகிறார்.

இந்த நிலையில், பிரதமரின் நிகழ்ச்சிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் ச.விசாகன் தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்றது. இதில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வீ.பாஸ்கரன், பல்கலைக்கழக அலுவலர்கள், பாரதிய ஜனதா கட்சியின் நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பட்டமளிப்பு விழா மேடையை தமிழக காவல் துறை கூடுதல் இயக்குநர் தாமரைக் கண்ணன், மதுரை மண்டல காவல் துறைத் தலைவர் அஸ்ரா கார்க், திண்டுக்கல் சரக காவல் துறை துணைத் தலைவர் ரூபேஸ்குமார் மீனா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வீ.பாஸ்கரன் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

10% இடஒதுக்கீடு தீர்ப்பு: தலைவர்களின் ஆதரவும், எதிர்ப்பும்...

சென்னை, நவ.7: உயர் வகுப்பினரில் பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கு மத்திய அரசு 10 சதவீத இடஒதுக்கீட்டை வழங்கியது செல்லும் என உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்புக்கு தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் ஆதரித்தும், எதிர்த்தும் கருத்து தெரிவித்தனர்.

கே.அண்ணாமலை (பாஜக): யார், யாருக்கெல்லாம் இடஒதுக்கீடு சலுகை ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளதோ, அவர்களுடைய உரிமைகள் உச்ச நீதிமன்றத் தீர்ப்பால் பறிபோகாது. தமிழகத்தைப் பொறுத்தவரை பி.சி., எம்.பி.சி., ஒதுக்கீடு நிலை மாறாமல் அப்படியே இருக்கும். யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லை. அதேபோல், எஸ்.சி., எஸ்.டி., மக்களுக்கான ஒதுக்கீட்டிலும் எந்தவிதமான மாற்றமும் இருக்காது.

இரா.முத்தரசன் (இந்திய கம்யூ): உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் தீர்ப்பு ஏற்புடையதல்ல. இடஒதுக்கீடுகொள்கை மறு ஆய்வு செய்யப்பட வேண்டும். இட ஒதுக்கீடுகள் தொடர்ந்து நீட்டிக்கப்படுவது சரியல்ல என்ற கருத்துகளும் வெளிப்பட்டுள்ளன. இவை பழங்குடி, பட்டியல் இன, இதர பிற்படுத்தப்பட்டோருக்கான உரிமைகளை பறிக்க வழிவகுக்கும்.

வைகோ (மதிமுக): சமூகநீதி தத்துவத்தையே கேலிக்குள்ளாக்கும் வகையில், உயர் வகுப்பு ஏழைகளுக்கு 10 சதவீத இடஒதுக்கீடு வழங்குவதற்காக பாஜக அரசு நிறைவேற்றிய 103 – ஆவது சட்டத் திருத்தம், அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கட்டுமானத்தைத் தகர்த்திருக்கிறது.

ராமதாஸ் (பாமக): இட ஒதுக்கீட்டின் நோக்கம் சமூக நிலை முன்னேற்றம் தான் என்ற சமூக நீதியின் அடிப்படை தத்துவத்தை இந்தத் தீர்ப்பு தாக்கி, தகர்த்து எறிந்திருக்கிறது.

தொல்.திருமாவளவன் (விசிக): உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து விசிக சார்பில் பேரமர்வு விசாரணைக்கு சீராய்வு மனு தாக்கல் செய்யப்படும்.

டிடிவி தினகரன் (அமமுக): பொருளாதார ரீதியான இடஒதுக்கீடு செல்லும் என உச்சநீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்பு அதிர்ச்சியும் ஏமாற்றமும் அளிக்கிறது. இந்திய அளவில் முறையான புள்ளிவிவரங்கள் இல்லாமல் அரசியல் காரணங்களுக்காக இடஒதுக்கீடுகள் வழங்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

கி.வீரமணி (திராவிடர் கழகம்): உயர் வகுப்பு ஏழைகளுக்கு 10 சதவீத இடஒதுக்கீடு செல்லும் என்கிற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு அரசமைப்புச் சட்டத்தின் அடிக்கட்டுமான சமூகநீதித் தத்துவத்துக்கு நேர் முரணானது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து சீராய்வு மனு தாக்கல் செய்ய வேண்டும்.

E-ஏல விறபனைக்கான பொது அறிவிப்பு-அசையா சொத்துக்களுக்கு

IIFL ஹோம் ஃபைனான்ஸ் லிமிட்டெட்., (முன்பு இந்நியா இன்ஃப்ராலைன் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்., என் அறியப்பட்டது) (IIFL-HFL), மனை எண் 98, உத்யோக விகார், கட்டம்-IV, குர்கான்-122015 (அரியானா) எனும் முகவரியில் நிறுவன அலுவலகத்தையும், பழைய எண் 41, புதிய எண் 76, பிளாக் எண் 1, Nu டெக் பிஸிடி, 3 அவுது தளம், 1 அவுது முதன்மைச் சாலை, தி.ஜ.டி. நகர் மேற்கு, நந்தனம், சென்னை-600035, (ஹிண்டாய் வோர் நம் அருகில்) எனும் முகவரியில் கிளை அலுவலகத்தையும் கொண்டுள்ள இந்த நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தின் விற்பனை, கடன்டுச் சொத்துக்களை சொக்கமாக்குதல் மற்றும் சிரமத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 ("சட்டம்") கீழ். IIFL-HFLஇன் அதிகாரப்பூர்வ அலுவலரானவர் (AO) நிறுவனத்தின் நிலுவைத்தொகைகளைத் திரும்பப் பெறும் பொருட்டு கீழ்க்காணும் கடன் கணக்கு எண்/வாடிக்கையாளர் எண் தொடர்பாக மேற்படி சட்டத்தின் பிரிவு 13(2)-இன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பை அடுத்துக் கீழ்காணும் சொத்தை / சொத்துக்களை "உள்ளது உள்ளது இடத்தில் மற்றும் உள்ளது உள்ளபடி" எனும் முறையில் விற்பனை செய்யும் உரிமையுடன் சேர்த்து கவாதீனம் செய்திருந்த நிலையில் விற்பனையானது கீழே கையொப்ப மிட்டுள்ளவரால் www.bankeauctions.com எனும் இணையத்தளத்தில் அளிக்கப்பட்டுள்ள e-ஏல தளத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

கடன்தாரர்(கள்) / கூட்டுக்-கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்)	கோரிக்கை அறிவிப்பு நாளும் தொகையும்	அசையாச் சொத்தின்/ கடனுக்குடான சொத்தின் விவரம்	அடமானச் சுவத்தின் நாள்	குறைந்தட்ச ரிசர்வ் விலை	சொத்து ஆய்வு நாள்
1. திரு. ராமச்சந்திரன் T S 2.திருமதி.வைதி R (வாடிக்கையாளர் எண். No.753937)	19-அக்டோபர்-2019 ரூ.15,49,446/- (ரூபாய் பதினைந்து லட்சத்து நாற்பத்து ஒன்பது ஆயிரத்து நானூற்று நாற்பத்து ஆறு மட்டும்) + ஏலம் அதிகரிப்பு தொகை ரூ.40,000/- (ரூபாய் நாற்பது ஆயிரம் மட்டும்)	சொத்தும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும்:சொத்தின் பகுதி,ஃபிளாட் எண்.9195, அளவிடுதல் மேல்கட்டுமானப் பகுதி 627 ச. அடி., 14வது தளம், பிளாக் எண்.09, TNHB LIG ஃபிளாட்ஸ் அம்பத்தூர், வானகரம் சாலை, அத்திவேட், சென்னை- 600058., சென்னை, சென்னை, 600058, தமிழ்நாடு, இந்தியா.	18-செப்-2020 பொத்த நிலுவைத் தொகை ரூ.(28-அக்டோபர்-2022 நாள் படி) ரூ. 19,63,084 /- (ரூபாய் பத்தொன்பது லட்சத்து அறுபத்து மூன்று ஆயிரத்து எண்பத்து நான்கு மட்டும்)	ரூ. 24,07,700/- (ரூபாய் இருபத்து நான்கு லட்சத்து ஏழாயிரத்து எழுநூறு மட்டும்) + டேவணித் தொகை (EMD) ரூ.2,40,770/- (ரூபாய் இரண்டு லட்சத்து நாற்பதாயிரத்து ஏழு நூற்றுஎழுபது மட்டும்)	06 டிசம்பர் 2022 11.00 மணி-14.00 மணி அணுகவும்: திரு.ஃபிரேம் R @ 9380014400 + டேவணித் தொகைக்கான கடைசி நாள் 08- டிசம்பர்-2022 மாலை 5 மணி வரை + E-ஏல நாளும், நேரமும் 12- டிசம்பர்-2022 11.00 மணி- 13.00 மணி

தொகை செலுத்தும் முறை:- அனைத்துத் தொகைகளும் "IIFL Home Finance Limited" எனும் பெயரில் குருகிராமில் மாறாத்தக்க வகையிலான கேட்பு வரைவோலை (DD) வடிவில் அல்லது பிரஸ்லும் கணக்கு வைவங்களுக்கேற்ப RTGS / NEFT மூலில் செலுத்தப்பட வேண்டும்.a) கணக்கின் பெயர்:IIFL ஹோம் ஃபைனான்ஸ் லிட்., b) வங்கியின் பெயர்: ஸ்டாண்டர்டு சார்டர்டு வங்கி லிட்., c) கணக்கு எண்:-53105066294, d) IFSC எண்: SCBL0036025 அல்லது https://quickpay.finance.com மூலம் செலுத்தலாம்.

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

1. E-ஏலத்தில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள ஏலதாரர்கள் சேவை வழங்குநரின் https://www.bankeauctions.com இணையத்தளத்தில் முன்கூட்டியே தங்கள் விவரங்களைப் பதிவு செய்து தாங்கள் உள்ளமைவதற்கான கணக்கு (login account) அதற்குண்டான பயனர் பெயர், கடவுச்சொல் ஆகியவற்றை உருவாக்கிக் கொள்ள வேண்டும். ஆர்வமுள்ள ஏலதாரர்கள் தங்கள் "ஒப்புத்துப்புள்ளிப் படிவ"த்தை பேணவிக்தொகை (EMD) செலுத்தியதற்கான விவரங்கள், வாடிக்கையாளர் விவர ஆவணங்களின் (KYC) நகல்கள், நிரந்தரக் கணக்கு எண் (PAN) அடை ஆகியவற்றுடன் சேர்த்து மேற்குறிப்பிட்ட கிளை அலுவலகத்துக்கு அனுப்ப / தாக்கல் செய்ய வேண்டும்.
2. ஏலதாரர்கள் தங்கள் விலைகோரவை "ஏல உயர்வுத் தொகை" எனும் பத்தியில் குறிப்பிட்டுள்ள தொகையின் மடங்குகளில் உயர்த்திக் கோரலாம். ஏலத்தின் கடைசி 5 நிமிடங்களில் ஏலம் கோரப்பட்டால் ஏலம் முடியும் நேரம் தானாகவே 5 நிமிடங்கள் நீட்டிக்கப்படும்.
3. வெற்றி பெறும் ஏலதாரர் ஏல விலையில் 25% தொகையை (டேவணித்தொகை உட்பட) அதிகாரப்பூர்வ அலுவலரால் ஏல விலை ஏற்றுக் கொள்ளப்பட்ட 24 மணி நேரத்துக்குள் செலுத்த வேண்டும். எஞ்சிய 75% ஏலத்தொகையானது ஈடு பெற்றுக் கடனளித்தவரால் விற்பனை உறுதி செய்யப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். அனைத்துத் தொகைகளும் மேலே குறிப்பிடப்பட்ட முறையில் மட்டுமே செலுத்தப்பட வேண்டும்.
4. சொத்து தொடர்பாக எழும் செஸ் வரி, உரிய முத்திரைத் தீர்வை, கட்டணம் மற்றும் இதர சட்டப்படியான நிலுவைகள் அல்லது இதர நிலுவைகளான நகராட்சி வரி, மின்சாரக் கட்டணங்கள், நில மற்றும் அனைத்து இதர இடைநிலைச் செலவினங்கள், கட்டணங்கள் உட்பட செலவாகும் அனைத்து வரிகளும் விகிதங்களும் வாங்குநரையே சாரும்.
5. ஏலதாரர்கள் தங்கள் ஏலப்புள்ளிகளைத் தாக்கல் செய்து e-ஏல விற்பனை நடைமுறையில் கலந்து கொள்ளும் முன்பு https://bankeauctions.com மற்றும் https://www.iifl.com/home-loans/properties-for-auction ஆகிய இணையத் தளங்களுக்குச் சென்று விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றை அறிந்து கொள்ளுமாறும் ஏல விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப் படுகிறார்கள்.
6. விற்பப்புள்ளர் ஏலதாரர்கள் மேலும் விவரங்களுக்கும் உதவி நடைமுறை மற்றும் e-ஏலத்துக்கான இணைய வழிப் பயிற்சி ஆகியவற்றுக்கும் சேவை வழங்குநரைத் தொடர்பு கொள்ளலாம்:- மின்னஞ்சல் முகவரி: support@bankeauctions.com உதவி அழைப்பு எண்கள்: 7291981124 / 25 / 26. சொத்து தொடர்பான கேள்விகளுக்குத் தொடர்பு கொள்ள:திரு. ஜிதேந்திர குப்தா @+91-9999582823, மின்னஞ்சல்:- jitendra.gupta1@iifl.com
7. மேற்கண்ட கடன்தாரர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் நேரடி சுவாதீனம் செயதபொழுது கடனீட்டுச் சொத்தில் விட்டுப் பயன்பாட்டுப் பொருட்கள் ஏதேனும் அடங்கியிருந்தால் அதனை 7 நாட்களுக்குள் எடுத்துக் கொண்டு வர வேண்டும். தவறினால் வரக்கூடிய சூழ்நிலைகள் காரணமாக ஏதேனும் சொத்து இழப்பு ஏற்படுமாயின் அதற்கு IIFL-HFL பொறுப்பாகாது.
8. மேலும் இதன் மூலம் கடன்தாரர்களுக்குத் தெரிவிப்பது யாதெனில், மேற்கண்டவாறு பொருட்களை எடுத்துக் கொள்ள அவர்கள் தவறினால் சட்டப்படி அவையும் சேர்த்து விற்பனை செய்யப்படும்.
9. வெற்றி பெற்ற ஏலதாரர் / ஏல வாங்குநர் எந்தக் கட்டத்திலாவது குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் தொகையைச் செலுத்தத் தவறினால் விற்பனையானது ரத்துச் செய்யப்பட்டு ஏற்கெனவே அவர் செலுத்திய தொகை (டேவணித்தொகை-EMD உட்பட) பறிமுதல் செய்யப்படுவதோடு சொத்தானது மீண்டும் ஏலத்துக்குக் கொண்டு வரப்படும்.
10. எந்தக் காரணமும் தெரிவிக்காமல் விலைகோரவை / ஏலத்தைத் தள்ளி வைக்க / ரத்துச் செய்ய அல்லது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றில் மாற்றம் செய்ய அதிகாரப்பூர்வ அலுவலருக்கு (AO) உரிமை உண்டு. விலைகோரலில் / ஏலத்தில் ஏதேனும் சிக்கல் எழுந்தால் IIFL-HFLஇன் அதிகாரப்பூர்வ அலுவலரது (AO) முடிவே இறுதியானது.

SARFAESI சட்டம் 2002, விதி 8 (6)-இன் கீழான சட்டப்படியான 30 நாள் விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் கடன்தாருக்கு அறிவிப்பது யாதெனில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை நாளது வரையிலான வட்டி மற்றும் துணைச் செலவுகள் ஆகியவற்றுடன் விலைகோரல் / ஏல நாளுக்குள் செலுத்தி விட வேண்டும். தவறினால் சொத்து ஏலமிடப்பட்டு / விற்கப்பட்டு நிலுவை ஏதேனும் பாக்கியிருப்பின் அது வட்டி மற்றும் செலவினத்துடன் திரும்பப் பெறப்படும்.

இடம்:சென்னை, நாள்:08 நவம்பர் 2022 ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், IIFL ஹோம் ஃபைனான்ஸ் லிமிட்டெட்

இந்தியன் வங்கி Indian Bank
இலாஹாபாத் அலகாபாத்

ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் மேலாண்மை கிளை - சென்னை
55, எத்திராஜ் சாலை, மண்டல அலுவலகம் கட்டிடம் II தளம், வெல்லிங்டன் எஸ்டேட், எழும்பூர், சென்னை - 600 008. தொலைபேசி : 044-28216711.
மின்னஞ்சல் : armb2chennai@indianbank.co.in

அறிவிப்பு

(1) M/s. V டெக் பார்க், (கடன்தாரர்), எண்.139, 140 ராஜாத் பிளாசா, ஆற்காட் ரோடு, வடபழனி, சென்னை - 600 026. **(2) திரு. V. தீபக்,** த/பெ வேலவன், **(பங்குதாரர்),** 27/18, G I கிருஷ்ணா காலனி, நெற்குன்றம்பாதை, வடபழனி, சென்னை - 600 026. **மேலும் இருப்பது :** ஸ்டார் ரிஸார்ட், எண்.5, சத்யசாய் அவென்யூ, காளாத்தூர், சென்னை - 600 112. **(3) திரு. C.N. ரமேஷ், (பங்குதாரர் மற்றும் அடமானதாரர்),** த/பெ நீலகண்டன், எண்.8/21, ரங்கையா கார்டன், மைலாப்பூர், சென்னை - 600 004. **மேலும் இருப்பது :** மனை எண்.8, புதிய கதவு எண்.61, பழைய கதவு எண்.25, அவ்வை நகர் மெயின் ரோடு, அருண்டேல் நகர், திருவான்மியூர், சென்னை - 600 041.

01.07.2015 தேதியிட்ட வேண்டுமென்றே கடனை திரும்பச் செலுத்தாதவர் மீதான RBI மாஸ்டர் சுற்றறிக்கையில் உள்ளபடி M/s. V டெக் பார்க் மற்றும் அதன் பங்குதாரர்கள்/ஜாமீன்தாரர்கள் திரு. V. தீபக் & திரு. C.N. ரமேஷ் ஆகியோரை வேண்டுமென்றே கடனை திரும்பச் செலுத்தாதவர் என்று எங்கள் வங்கி வகைப்படுத்தியுள்ளது என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

குழுவின் ஆலோசனைக்கு பிறகு, வைக்கப்பட்ட ஆதாரங்கள்/பொருள் பதிவுகளின் அடிப்படையில் முதன்மை பார்வை மேற்கொண்டு கடன்தாரர் நிறுவனமான M/s. V டெக் பார்க் மற்றும் அதன் பங்குதாரர்கள்/ஜாமீன்தாரர்கள் திரு. V. தீபக் & திரு. C.N. ரமேஷ் ஆகியோரை 01.07.2015 தேதியிட்ட வேண்டுமென்றே கடனை திரும்பச் செலுத்தாவர் மீதான RBI மாஸ்டர் சுற்றறிக்கையின்படி, 2.1.3(b) அத்துடன் வாசிக்க வேண்டிய 2.2.1(b), 2.2.1(c) & 2.2.1(f) என்ற ஷரத்தின் அடிப்படையில் விரிவான நிதி திசைதிருப்புதல் மற்றும் 2.1.3(c) என்ற ஷரத்தின் அடிப்படையில் நிதி ஒதுக்குதல் ஆகிய காரணங்களினால் வேண்டுமென்றே கடனை திரும்பச் செலுத்தாவர் என வகைப்படுத்தக்கூடும் எனவும் மற்றும் மேற்கண்ட ஆதாரங்களின் பேரில் காரணம் கேட்பு அறிவிப்பு வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

கடன்தாரர் நிறுவனமான M/s. V டெக் பார்க் மற்றும் அதன் பங்குதாரர்கள்/ஜாமீன்தாரர்கள் திரு. V. தீபக் & திரு. C.N. ரமேஷ் ஆகியோருக்கு 17.01.2022 தேதியிட்ட காரணம் கேட்பு அறிவிப்பு (SCN) அளிக்கப்பட்டது. மேலும், காரணம் கேட்பு அறிவிப்பு விநியோகம் செய்யப்படாததால், அது 03.02.2022 அன்று தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் (ஆங்கிலம்) மற்றும் தினமணி (தமிழ்) ஆகிய இரு பத்திரிக்கைகளிலும் பிரசுரம் செய்யப்பட்டது. 26.01.2021 (26.01.2022) தேதியிட்ட கடிதத்தின் மூலம் ஸ்ரீ. C.N. ரமேஷ் அவர்கள் 17.01.2022 தேதியிட்ட காரணம் கேட்பு அறிவிப்பில் உள்ள குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்துள்ளார். 15.07.2022 அன்று நடைபெற்ற கூட்டத்தில், மேற்கண்ட பார்வையின் அடிப்படையில் மற்றும் 26.01.2021 (26.01.2022) தேதியிட்ட கடன்தாரரின் பதிலை கவனத்தில் கொண்டு குழுவின் ஆலோசனைக்கு பிறகு, கடன்தாரர் நிறுவனமான M/s. V டெக் பார்க் மற்றும் அதன் பங்குதாரர்கள்/ஜாமீன்தாரர்கள் திரு. V. தீபக் & திரு. C.N. ரமேஷ் ஆகியோரை 01.07.2015 தேதியிட்ட வேண்டுமென்றே கடனை திரும்பச் செலுத்தாதவர் மீதான RBI மாஸ்டர் சுற்றறிக்கையின்படி, 2.1.3(b) அத்துடன் வாசிக்க வேண்டிய 2.2.1(b), 2.2.1(c) & 2.2.1(f) என்ற ஷரத்தின் அடிப்படையில் விரிவான நிதி திசைதிருப்புதல் மற்றும் 2.1.3(c) என்ற ஷரத்தின் அடிப்படையில் நிதி ஒதுக்குதல் ஆகிய காரணங்களினால் வேண்டுமென்றே கடனை திரும்பச் செலுத்தாதவர் என அறிவிக்க உத்தரவு அளிக்கப்பட்டது.

20.09.2022 அன்று நடைபெற்ற வேண்டுமென்றே கடனை திரும்பச் செலுத்தாதவர் மறு ஆய்வு குழு (WDRC) கூட்டத்தில், தகவல்கள் / சான்றுகள் / பொருள் ஆவணங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மறுஆய்வு செய்து மற்றும் 15.07.2022 தேதியிட்ட WDSC உத்தரவை உறுதி செய்து, M/s. V டெக் பார்க் மற்றும் அதன் பங்குதாரர்கள்/ஜாமீன்தாரர்கள் திரு. V. தீபக் & திரு. C.N. ரமேஷ் ஆகியோரை 01.07.2015 தேதியிட்ட வேண்டுமென்றே கடனை திரும்பச் செலுத்தாவர் மீதான RBI மாஸ்டர் சுற்றறிக்கையின்படி, 2.1.3(b) அத்துடன் வாசிக்க வேண்டிய 2.2.1(b), 2.2.1(c) & 2.2.1(f) என்ற ஷரத்தின் அடிப்படையில் விரிவான நிதி திசைதிருப்புதல் மற்றும் 2.1.3(c) என்ற ஷரத்தின் அடிப்படையில் நிதி ஒதுக்குதல் ஆகிய காரணங்களினால் அவர்களை வேண்டுமென்றே கடனை திரும்பச் செலுத்தாதவர் என அறிவிக்கப்படுகிறது.

மேற்கூறியவற்றை கருத்தில் கொண்டு, வேண்டுமென்றே கடனை திரும்பச் செலுத்தாவர் மறு ஆய்வு குழுவால் (WDRC) உங்கள் அனைவரையும் **"வேண்டுமென்றே கடனை திரும்பச் செலுத்தாதவர்"** என்று வகைப்படுத்தி எடுக்கப்பட்ட முடிவை இதன் மூலம் உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த அறிவிப்பு கிடைத்த 15 நாட்களில் தற்போதைய வட்டி மற்றும் கட்டணங்களுடன் சேர்த்து கடனை திரும்பச் செலுத்துமாறு நாங்கள் உங்களுக்கு அறிவுறுத்துகிறோம். தவறினால், வங்கியானது மேலும் எந்த அறிவிப்புமின்றி, RBI மற்றும் DFS-ன் வழிகாட்டுதல்களின்படி உங்கள் பெயர்கள் மற்றும் புகைப்படங்களை பத்திரிக்கைகள்/வங்கியின் இணையதளத்தில் வெளியிட நேரிடும் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தேதி : 07.11.2022
இடம் : சென்னை

கிளை மேலாளர்,
வேண்டுமென்றே கடன் திரும்பச் செலுத்தாதோர் பரிசோதனை குழு (WDSC) சார்பாக

இந்தியன் வங்கி Indian Bank
இலாஹாபாத் அலகாபாத்

ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் மேலாண்மை கிளை - சென்னை
55, எத்திராஜ் சாலை, மண்டல அலுவலகம் கட்டிடம் II தளம், வெல்லிங்டன் எஸ்டேட், எழும்பூர், சென்னை - 600 008. தொலைபேசி : 044-28216711.
மின்னஞ்சல் : armb2chennai@indianbank.co.in

அறிவிப்பு

(1) M/s. ஒப்பியியப்பா ஆட்டோமொபைல்ஸ், பிரதிநிதியாக இதன் பங்குதாரர்கள், PNC டிரேட் சென்டர், எண்.7, கான்வெண்ட் தெரு, ஷெனாய் நகர், சென்னை - 600 030. **(2) திரு. N.S. ஸ்ரீனிவாசன், (பங்குதாரர்/அடமானதாரர்/ஜாமீன்தாரர்),** த/பெ. P.N. சண்முகம், G-61, 12வது தெரு. அண்ணா நகர் கிழக்கு, சென்னை - 600 102. **(3) திருமதி. கச்லா (பங்குதாரர்/ஜாமீன்தாரர்),** க/பெ N.S. ஸ்ரீனிவாசன், G-61, 12வது தெரு. அண்ணா நகர் கிழக்கு, சென்னை - 600 102. **(4) திருமதி. M. ஹமீதா, (ஜாமீன்தாரர்),** க/பெ. முகமது இப்ராஹிம், 7/3, 3வது குறுக்கு தெரு, ஷெனாய் நகர், சென்னை - 600 030. **மேலும் இருப்பது :** பழைய எண்.11, புதிய எண்.7, 1B, லாண்டன்ஸ் ரோடு, கீழ்பாக்கம், சென்னை - 600 010.

01.07.2015 தேதியிட்ட வேண்டுமென்றே கடனை திரும்பச் செலுத்தாதவர் மீதான RBI மாஸ்டர் சுற்றறிக்கையில் உள்ளபடி M/s. ஒப்பியியப்பா ஆட்டோமொபைல்ஸ் மற்றும் அதன் பங்குதாரர்கள்/ஜாமீன்தாரர்கள் திரு. N.S. ஸ்ரீனிவாசன், திருமதி. கச்லா & திருமதி. M. ஹமீதா ஆகியோரை வேண்டுமென்றே கடனை திரும்பச் செலுத்தாதவர் என்று எங்கள் வங்கி வகைப்படுத்தியுள்ளது என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

குழுவின் ஆலோசனைக்கு பிறகு, வைக்கப்பட்ட ஆதாரங்கள்/பொருள் பதிவுகளின் அடிப்படையில் முதன்மை பார்வை மேற்கொண்டு கடன்தாரர் நிறுவனமான M/s. ஒப்பியியப்பா ஆட்டோமொபைல்ஸ் மற்றும் அதன் பங்குதாரர்கள்/ ஜாமீன்தாரர்கள் திரு. N.S. ஸ்ரீனிவாசன், திருமதி. கச்லா & திருமதி. M. ஹமீதா ஆகியோரை 01.07.2015 தேதியிட்ட வேண்டுமென்றே கடனை திரும்பச் செலுத்தாவர் மீதான RBI மாஸ்டர் சுற்றறிக்கையின்படி, 2.1.3(a) என்ற ஷரத்தின் அடிப்படையில் செலுத்தும் திறன் இருந்தும் செலுத்த விருப்பமில்லாதிருத்தல் மற்றும் 2.1.3(c) என்ற ஷரத்தின் அடிப்படையில் நிதி ஒதுக்குதல் ஆகிய காரணங்களினால் வேண்டுமென்றே கடனை திரும்பச் செலுத்தாவர் என வகைப்படுத்தக்கூடும் எனவும் மற்றும் மேற்கண்ட ஆதாரங்களின் பேரில் காரணம் கேட்பு அறிவிப்பு வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

கடன்தாரர் நிறுவனம் மற்றும் அதன் பங்குதாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கு 20.06.2022 தேதியிட்ட காரணம் கேட்பு அறிவிப்பு (SCN) அளிக்கப்பட்டதற்கு. அது ஒப்புக்கொள்ளப்படவில்லை. எனவே, மேற்சொன்ன அறிவிப்பு 05.07.2022 அன்று இரு பத்திரிக்கைகளில் (தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்-ஆங்கிலம் மற்றும் தினமணி-தமிழ்) பிரசுரம் செய்யப்பட்டது. கடன்தாரர் நிறுவனம் மற்றும் பங்குதாரர்கள்/ஜாமீன்தாரர்களிடமிருந்து இன்றுவரை எந்தவித பதில்/சமர்ப்பிப்பும் பெறப்படவில்லை.

குழுவின் ஆலோசனைக்கு பிறகு,